செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அo] யாழ்ப்பாணம்:- கீலக ஞு கார்த்திகை மீ கச உ வெள்ளிக்கிழமை (29-11-1968) [இல-நச

# பதநீர்த்தொழிற்சாலை நிறுவுக

## வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத் தீர்மானம்

—————0—————

5-12-68 முதல் 11-12-68 வரையுமுள்ள "நாவலர் வாரத்தில் நாவலரின் நல்வாக்குகளை நற்சிந்தனை நேரத்திலும், அதையடுத்தும், தகுந்த அறிஞர்களைக்கொண்டு வானொலிமூலம் ஒலிபரப்புதல் வேண்டும்" என இலங்கை வானொலி நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்வது என்னும் தீர்மானம் சென்ற 27-11-68 ல் நடைபெற்ற வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தின் நிர்வாகசபைக்கூட்டத்தின்போது ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாமன்றத்தலைவர் திரு. வை இரகுநாதமுதலியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களாவன.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை சைவ பரிபாலன சபையாருடன் இணைந்து கொண்டாடுவது.

2. மேற்படி மன்றத் தீர்மானப்படி நாவலர்விழா நிகழ்ச்சிகளை (11-12-68-ல் நடைபெறும்) இலங்கை வானொலி நிலயத்தார் ஒலிப்பதிவு செய்துவானொலி நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டல்.

3. பனங்கள்ளிலிருந்து சாராயம் உற்பத்தி செய்யும் திட்டத்தை நீக்கிவிட்டு பதநீர்த் தொழிற்சாலையை நிறுவி பொருளாதார வளத்தைப் பெருக்க வேண்டும் என அரசாங்கத்தையும் வடபகுதி பாராளுமன்ற உறுப்பினரையும் கேட்டுக் கொள்ளல்.

4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் நாவலருக்கு உருவச்சிலை நாட்ட முற்பட்டதையிட்டு நன்றி தெரிவிப்பதோடு, செய்யப்படும உருவச் சிலையை யாழ்ப்பாண நகரமண்டபச் சூழலிலேயே அமைக்க வேண்டும் எனவும், அப்படி அமைப்பதால் எல்லோரும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதனையும் மேற்படி சபைக்கு இம்மன்றம் ஆலோசனை கூறுகின்றது.

5. நல்லூர் தெற்கு திருவீதியில் இருக்கும் நாவலர் தர்மச் சொத்தாக விளங்கும் நிலத்தில் நாவலர் பெருமான் நோக்கத்துக்கு அமைந்த சைவப்பிரகாச மடத்தை நிறுவி, ஆங்கு திருமுறை வகுப்புக்கள், புராண படனங்கள், சைவ சித்தாந்த வகுப்புகள், சிவ பூசை, குருபூசை, மாகேசுரபூசை, சைவசமயப் பிரசங்கங்கள் என்பன நடைபெற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையும், ஏனைய சபைகள், மன்றங்கள் கழகங்களும் முன்வர வேண்டும்.

6 நாவலர் பெருமான் தமது வாழ்நாளை சைவ சமய வளர்ச்சிக்கே அர்ப்பணித்துப் பணியாற்றினர், சமயம் வளர தமிழ் வளரும் என்பது அவரின் அடிப்படை நோக்காகும். அஃது அவ்வாறிருக்க நாவலர் பெருமான் "ஒரு தேச பக்தன்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையார் பத்திரிகை மூலம் விடுத்த செய்தி சைவ சமய மக்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் செய்தியாகும் என்பதனை இம மன்றம் ஆழ்ந்த மன வருத்தத்துடன அறியத் தருகின்றது.

7. இந்து சமய பாடத்தைச் சர்வகலா சாலைப் புகுமுகத் தேர்வுக்குரிய ஒரு பாடமாக அங்கீகரிக்க வேண்டும். மேலும் பேராதனைச் சர்வகலாசாலையில் இந்துக் கலாசாரத்தைக் கற்பிக்க சர்வகலாசாலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டல.

8. மற்றைய மதங்களுக்குச் சமயபாடப் போதனா ஆசிரியர்கள் இருப்பது போல இந்து சமயபாடத்தைப் போதிப்பதற்கும் தகுதி வாய்ந்த

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தூண்டுசுடரனைய சோதி
கண்டாய்
தொல்லமரர் சூழா மணிதான்
கண்டாய்
காண்டற்கரியகடவுள் கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்
கண்டாய்
வேண்டுவோர் வேண்டுவதே
யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத
மெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான்
கண்டாய்
மறைக்காட்டுறையு மணாளன்
றானே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்,

### நாவலர் நல்வாக்கு

நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அது பயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

### நாவலர் தினம்

ஐந்தாம் குரவராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானது குருபூசைத் தினத்தை வழமைபோலச் சிறப்பாகக் கொண்டாடுதற்கு வேண்டிய ஒழுங்குகளை யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் செய்து வருகிறது. 11-12-68 -ல் நிகழவிருக்கும் இவ் விழாவில் பல சைவ அறிஞர்கள் கலந்து உரையாற்றுவார்கள். (ந.நி

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

## சில கருத்துகள்

— ஒரு சிந்தனையாளர் —

(அ) 1. சைவக் கோட்பாடுகள், சாத்திரவிதிகள், சமயாசாரங்கள் என்றிவற்றைப்பற்றித் தெரிவிக்கும் அதிகாரம், சாத்திரம்வல்ல, அங்கீகரிக்கத்தக்க சமய குருபீடத்துக்கே உரியதாம்.

இது மற்றைச் சமயத்தவர்களின் நடைமுறைகளிலிருந்து அறியத் தக்கது.

2. சாத்திரம்வல்ல குருபீடத்தினது, சாத்திரத்துக்கு மாறில்லாத போதனை வழி நடப்பது சீடர்கள் கடன்; சீடர்களின் வழிக்குக் குரு நடக்கத் தொடங்கினால், சமயந் தலை தடுமாறிக் கேடுறும். இது நாவலர் வலியுறுத்துங் கருத்து.

3 நாவலர் சாத்திர அறிவும் ஒழுக்கமும் படைத்த குருபீடமும் சாத்திர விதிக்கமைந்த கோயிலும் உண்டாதற்கு முயன்றவர்.

4. நாம் ஒரு கோயிலும் ஒரு குருவும் நமக்குக் கிடைத்தற்காவது, வழி காண வேண்டும். வழியுண்டு. அது நமது தவத்தில் தங்கியிருக்கின்றது. குருகிடையாமலிருப்பது நமது தவக் குறை.

5 குரு அந்தணர்; அறந் தெரிந்தவர்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவர். ஊர்ந்து

(தொடர்ச்சி 3-ம் ஆம் பக்கம்)

## அந்தணர் பயின்ற அருமறை வேள்வி

ஸ்ரீ வ. குகசர்மா

பண்டைய இலக்கியங்கள் படிப்பதற்கு இனிமை பயப்பன. மகிழ்ச்சியைக்கொடுப்பதுடன், நற்பண்புகளையும் நம் மனதில் உறுதி பெறச் செய்யும் தன்மையுடையன. அந்தணருக்கு ஆறு தொழில்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பாக தவறவிட முடியாத இருதொழில்கள் உள்ளன. அவை வேதமோதலும் அக்கினி கோத்திரமுமாம். அக்கினி கோத்திரம் என்பது வேதவிதிப்படி நித்தியாக்கினி வளர்த்தல். யாகத்திற்குரிய அக்கினி மூவகைப்படும்.

காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி என்பன அவை. இந்த மூவித அக்கினியையும் வளர்க்குந் தன்மை யுடையவராதலால் அந்தணர் "முத் தீச்செல்வர்" என அழைக்கப்பெறுகின்றனர். "மூன்று வகை குறித்த முத் தீச் செல்வத்த இருபிறப்பாளர்" என்பது திருமுருகாற்றுப்படை.

இலக்கியங்களிலே ஆங்காங்கு வேதமோதலின் சிறப்பும் அருமறை வேள்வியின் சிறப்பும மலிந்து கிடக்கின்றன. மாங்குடி மருதனார் பாடிய "மதுரைக் காஞ்சி" என்னும் செய்யுளில் அந்தணர் வேதமோதும் அழகு கூறப்பட்டுள்ளது. மதுரை மாநகரிலே ஒரு விடியற் காலம். சூரியனது வரவை அறிந்த பொய்கையில் உள்ள தாமரை மலர் மொட்டு மெல்ல அலருகின்றது. அம் மலரிலிருந்து சுகந்தம் வீசுகின்றது. அதன் சுகந்தத்தாலும் அழகாலும் கவரப்பட்ட தும்பி என்னும் ஆண் வண்டானது, அதில் உள்ள மகரந்தத்தை உண்ண விரும்பி அங்கு சென்று அம் மலரைச் சுற்றி மெல்லிசை பாடுகின்றது அந்த மெல் லிசையைக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

கிலகளும் கார்த்திகைமீ கச-உ வெள்ளிக்கிழமை [1968]

## விளக்கீடு

விளக்கீடு இந்துக்களுடைய விழாக்களில் ஒன்று கும். விளக்கினை இட்டுக் கொண்டாடும் விழா. இதனைக் கார்த்திகைத் தீபம் எனவும் அழைப்பர்.

“வருதேண் மதியிற் கார்த்திகை நாண் மல்கும்
விழைவிற் பூசித்துக்
கருதார் புரங்க ணகைத் தெரித்த கடவுண் மகிழ
விளக்கிடுவோர்”

—பெருர்ப்புராணம்.

இவ்விழா வினைப்பற்றி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரும் என்பைப் பெண்ணுக்கிய தேவாரப்பதிகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில்கபா லீச்சரத்தான் றொல் கார்த்திகைநாட்
டளத்தேந் தினமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்.

இத்தேவாரப்பதிகத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் வேத சிவாகமங்களிலே விதிக்கப்பட்ட முக்கியமான விழாக்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்விழாக்களைப் பக்தி சிரத்தையுடன் நடத்துகின்றவர்களும் தரிசிக்கின்றவர்களும் சிவசம்பந்தத்தைப் பெறுவர். அதற்காகவே இவ்விழாக்களைக்கொண்டாடும்படி நமது சமயம் விதித்திருக்கின்றது. வேடிக்கைக்காகவும் பேர்புகழுக்காகவும் விழாக்களைக் கொண்டாடுவதால் மக்கள் ஒரு பயனையும் அடையமாட்டார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பூம்பாவை என்னும் பெண்ணை உயிர்ப்பித்த வரலாறு சிவசம்பந்தமான விழாக்களின் பெருமையைநன்குவிளக்குகின்றது. “மண்ணிலே வினைக்கீடாகப் பிறந்தவர்கள் அடையவேண்டியபயனுவன, பிறைசூடும்பெருமானடியார்தமை அமுது செய்வித்தலும், கண்களினுலே அவ்விறைவரது திருவிழாக்களின் பெரும் சிறப்பினைக் கண்டு மகிழ்தலுமாம் இவையிரண்டும் உறுதிப் பொருளாவன என்பது உண்மையானல் உலகத்தவர் முன்னே உயிர் பெற்றெழுந்து வருவாயாக” எனப் பூம்பாவையை நாயனர் விளித்து என்பினின்றும் தோற்றுவித்தமை இத்தகைய விழாக்களின் தெய்வீகத்தன்மையைக் காட்டுகின்றது.

பிரமாவும் விட்டுணுவும் சிவபெருமான் தமக்குச் சோதி வடிவம் காட்டிய வடிவைக் காட்டியருளவேண்டுமென்று பிரார்த்தித்தபொழுது கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்திலன்று அக் காட்சி அவர்களுக்குக் காட்டப்பட்டது. அச்சோதி தரிசனத்தையே இவ் விழாக் குறிப்பதாகும்,

இவ்விழா குறித்த தினத்தில் திருவண்ணுமலையில் சிறப்பாக நடைபெறும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கார்த்திகைத் தீப தரிசனத்தைத் தரிசனஞ் செய்ய அங்குசெல்வார்கள். “அண்ணுமலை தொழுவார் வினை வழுவாவண்ணமறுமே” என்ருர் சம்பந்தப்பெருமான். ‘அண்ணுமலை யெம்மண்ணு போற்றி’ என்ருர் மாணிக்கவாசக சுவாமிகள். திருவண்ணுமலை ‘நினைக்க முத்தி கொடுக்கும் தலம்’ என்று கூறப்படுகின்றது.

சைவ சமயத்தவர்கள் எல்லோரும் இல்லங்களைச் சுத்தஞ்செய்து இத்தினமாகிய கார்த்திகை மாதக்கார்த்திகைநட்சத்திரத்திலன்று தீபமேற்றி திருவண்ணுமலைப் பெருமானைச் சோதிவடிவாகத் தரிசனஞ் செய்யக்கடவர். எங்ஙனம் மக்கள் ஏற்றுகின்ற தீபம் புறத்திருளைப்போக்குகின்றதோ அங்ஙனமே இறைவனுடைய தியானம் அவர்களுடைய அகத்திலுள்ள அஞ்ஞான விருளைப் போக்குமென்பது உறுதி.

## கேட்டினுக்கு ஒழிவு காண்போமா?

— செல்வம் —

கௌரவ அமைச்சர் திரு. தஹநாயக்கா அவர்கள் “இலங்கையில் பூரணமான மது விலக்கு முறையைக் கொண்டு வருவதற்கு இன்னும் இருபது வருடகாலம் செல்லும்” என்றும் “பூரண மதுவிலக்கு முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்படுங் காலத்தில் இங்கு உற்பத்தியாகும் சாராயத்தைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலா” மெனவும் குறிப்பிட்டு மேலும் “மதுவிலக்கு முறை நடை முறையிற் சித்தியடைந்தாலும் சரி சித்தியடையாவிட்டாலும் சரி சாராயம் வடிக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட மாட்டா” எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். மேடி வசனங்கள் யாவும் சீர்தூக்கிச் சிந்திக்க வேண்டியவைகளாம்.

முதலில் “பூரணமான…… செல்லும்” என்னும் வசனத்தை நோக்குவோம் “இன்று என்பாரிலும் நாளை என்பாரிலும் இல்லை என்பார் மிக நல்லரே” என்றனர் ஆன்றோர். இன்னும் இருபது வருடத்தில்—அதுவும் வடபகுதியில் சாராயவடிசாலையும் செயல் படும் நிலையில் மதுவின் ஆட்சி எவ்வளவு நிலை பெற்று விடும் என்பதைச் சிந்தியுங்கள் இன்று பிறக்கும் குழந்தை கூட இன்னும் இருபது வருட காலத்தில்—சமுதாயத்தைச் சீர்படுத்தவேண்டிய காலத்தில் — மதுவுடனேயே வாழ்க்கை நடாத்தினுல் — ஒருவனை நல்லவனுகவோ கெட்டவனுகவோ பயிற்றுவது அவனது சமுதாயமும் சூழலுமே என்பதற்கிணங்க — மதுவுண்டு மயங்கும் சமுதாயத்துத் தானும் வளர்ந்து — வாழ்ந்து — தானும் மதுவுக்கடிமையாய் வாழும் நிலையில் — பூரண மது ஒழிப்புப் பற்றிச் சிந்திப்பது யார்? கிணற்றுத்தவளை நீரருந்திபதைக் கண்டது யார்? அருந்தாததைக் கண்டது யார்? நீரருந்தாது விடுமா? மரவரி முறை, சாராயத்தவறணை, மேலும் சாராய வடிசாலை—மதுவகையான் நிரம்பிய சமுதாயம் — இங்கு வளரும் சிறுர்கள் மதுப்பிரியர்களாக மாட்டார்கள் என்று எப்படிக் கூறமுடியும்?

மதுவுக்கு எதிர்ப்புக் கூடிவரும் இக் காலத்திலேயே மது ஒழிப்பு முறை கையாளப்படாவிட்டால் — பூரணமாக மது வரவேற்கப்படும் நிலையில் மது ஒழிப்புப்பற்றிச் சிந்திக்கவும் முடியுமா? ஓர் சிறு முட்செடியை முளை கொள்ளும் காலத்தில் இலகுவில் அழித்து விடலாம். ஆயின் பெரிய விருட்சமான பொழுது அதனை அழிப்பதற்குக் கோடரியும் சில காத் தோல்வி காணுமல்லவா? அதேபோல் மதுவென்னும் விருட்சமும் முதுமையெய்தியபின் அழிக்க முடியுமா? சிந்தியுங்கள்!

இனி இரண்டாவதாக உள்ள “பூரண மது விலக்கு ……செய்யலாம்” என்பதைச் சிந்திப்போம். நமக்கு — நம் சமுதாயத்துக்கு — ஆகாதஒரு பொருள் அன்னியருக்கு— அன்னிய சமுதாயத்துக்கு உதவுமா? “தான் கெட்டாலும் தக்கார்கெடக் கூடாது” என்பதை மறக்கலாமா? இக் கூற்றை நினைக்கும் பொழுது “யார்குடி கெட்டாலும் நீ குடி மிளகு சாறு” என்னும் நாடோடிப் பேச்சுரை நினைவுக்கு வருகின்றது.

மற்றவர்களைக் கெடுத்துத் தீய வழியில் சம்பாதிக்குப பொருள் நமக்கு — நமது நாட்டுக்கு நன்மை பயக்குமா?

“அறன் ஈனும் இன்பமும் ஈனும்
திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்”

இதன் உட்பொருள் (பொருளைச்) சேர்க்கும் திறம் அறிந்து (எவ்வுயிர்க்கும் தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் (தான்) ஒருவனுக்கு அறத்தையும் (அவன் வாழ்வில்) இன்பத்தையும ஒருங்கே கொடுக்கும் என்பதாம்.

மேலும் தீவினை விட்டீட்டல் பொருள் என்றனர் ஆன்றோர்? குடும்பத்தை— சமூகத்தை — நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் — அழிக்கும் மதுவகையை (சாராயத்தை) விற்றுச் சம்பாதிக்கும் பொருள் நல்ல வழியில் ஈட்டப்படுவதொன்ருே?

உவர் நிலத்தில் விளைவிக்கப்பட்ட நெல்லில் உவர்த்தன்மை மிக்கிருந்து இதமளியாவாறு போல தீய வழியில் ஈட்டிய பணமும் வாழ்க்கைக்கு நன்மை பயக்காதன்ருே?

மேலும் “மதுவிலக்கு …… மூடப்படமாட்டா” என்ருல் “நமது நாடு அந்நிய நாட்டு — மக்களை தீய வழியில் கொண்டு செல்லும் — தீய வாழ்க்கைக்கு வழிவகுத்து உதவும் — நாடாகத் திகழ வேண்டுமா? தன்னுயிர் போல் மன்னுயிரையும் — தன்நாடுபோல் மறு நாட்டையும் ஒத்து நோக்க வேண்டிய நாம நம் நாட்டில் மதுவை ஒழித்து விட்டு அன்னிய நாட்டில் மதுவைத் திணிக்கலாமா? திணிக்க முற்படும் அரசியலை நாம் ஏற்கலாமா? மேலும்

தீப்பால தான்பிறர்கண் செய்
யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்

என்பது வள்ளுவர் வாக்கு துன்பம் செய்யும தீவினைகள் தன்னை வருத்துதலை விரும்பாதவன் தீய செயல்களைத்தான் பிறரிடம் செய்யாமலிருக்க வேண்டும் என்பதே இக் குறளின் பொருளாகும். இந்நிலையில் நாம் (வாழ்க்கைக்கும் சமுதாயத்துக்கும்) தீமை பயக்கும் சாராயத்தைத் தயார் செய்து நாம் உபயோகிக்காது — (பூரண மது ஒழிப்பு நிறைவேற்றப்பட்டால்) அன்னியருக்கு விநியோகிக்கலாமா? விநியோகிக்க விரும்புதல் பிறருக்குக் கேடு நினைப்பதை ஒக்குமல்லவா? மேலும் நாம் —நமது சமுதாயம் நன்கு வாழவேண்டுமானுல்.

“மறந்தும் பிறன்கேடு சூழற்க
சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு”

என்னும் குறளை உற்றுணர்ந்து வாழுதல் வேண்டும்.

அல்லாமலும்

“அருளோடும் அன்போடும்
வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்”

எனும் குறளின் பொருளையும நோக்குதல் வேண்டும்.

இவைகளை உற்று நோக்கின கேடுவிளைக்கும் மதுவகையான் — செய்ய உதவுவதால் — செய்து அவற்றைப் பிறர்க்கு அளிப்பதனுல் — வரும் செல்வம் எனஃறன்றும் தீமையானது. அது நமக்கு என்றும் தீமை பயக்கும் ஆகவே நமக்கு இதுவரையில் (மரவரிமுறையாலும சாராயத்தவறணை முறையாலும) உள்ள தீமைகள் போதாதென்று மேலும் (சாராய வடிசாலையால்) உறவிருக்கும் கேட்டினையும் வரவேற்காது உற்றுணர்ந்து ஆவனவற்றை அரசியலார்ருக்கு எடுத்துரைத்து எமக்கு — எம் (வருங் காலச்) சமுதாயத்திற்கு ஏற்படவிருக்கும் இழுக்குக்கும், கேட்டினுக்கும் ஒழிவு காண்போமா!

## பதநீர்த் தொழிற்சாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களை நியமிக்க வேண்டும், என அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

நாவலர் பெருமானின் குறிக்கோளை கண்டு அறிந்து அதற்கு அமைவாகவே அவர் வழிநின்று பணியாற்ற வேண்டியதுதான் சிறந்த முறை என்பதனையும் சபையோர் சுட்டிக் காட்டினர்

## நாவலர் முத்திரை வெளியிடுக

சென்ற 22-11-68 ல் சைவப் புலவர் திரு வ. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாந்தையா மடம் சைவசமய அபிவிருத்திக கழகத்தின் விசேக சபைக் கூட்டத்திற் கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றன.

1. வழமைபோல் சைவசமய அறிவுப் போட்டியை மார்கழி மாதத்தில் நடாத்துதல்
2. 11.12.68ல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைதினததைச் சிறப்பாகக கொண்டாடுதல்
3. சைவமும் - தமிழும் தமது இரு கண் எனப் போற்றிப் பணியாற்றிய நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை ஸ்தாபிக்க முன் வந்த நாவலர் நினைவுச் சபையைப் பாராட்டுதல், மேலும் ஞாபகமாக முத்திரை வெளியிடுமாறு அரசினரைக் கேட்டுக் கொள்ளுதல்

# சங்கார கர்த்தாவே முதற் கடவுள்

———0———

**22-10-68** ல் அன்று சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மெய்கண்டதேவநாயனார் குருபூசைத் தினத்தில் சித்தாந்த பண்டிதர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.

சந்தான ஆசாரியர்களில் முதல்வரான மெய்கண்ட தேவரால், சமய ஆதீக சித்தாந்த சைவர்களுக்கு'எப்பயின் வைப்பென ஈந்த' முதல் நூலாகிய சிவஞான போதததில், பன்னிரு சூத்திரங்களுள் புனர் உ‌ற்பவத்தின் சிறப்பிலக்கணங்களைக் கூறுகின்ற இரண்டாவது சூத்திரத்தின் கருத்தை அடியேன் தெரிந்தவாறும் இயன்றவாறும் கூறுகின்றேன் அதன் குற்றங்களைந்து குணங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அன்பர்காள்!

"......வே தானே யாயிரு வினையிற் போக்கு வரவு புரிய வாணையின் நீக்க மின்றி நிற்கு மன்றே" என்பது சூத்திரம். என் நுதலிற்றோவெனின் புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று. அஃது அங்ஙனமாக, முதலுற்பவம் வருமாறுணர்த்தாது புனருற்பவம் வருமாறுணர்த்துவது என்னையெனின்,—பிரபஞ்சம் அநாதியாதலின், அம்முதற் கோடி நம்மனோரான் அறியலமையானும், ஒடுங்கியின் மீளவுளதாமாறே ஈண்டு அவாய்நிலையான் உணர்த்த நின்றதாகலானும அதுவே கூறினாரென்பது.

அறருயினும், முற்கணுற் வினையிற் பவமமாறு இவ் வியலபிற்றென்பது — பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் — முற்பாற் – தநுகரணமும் புவன முந்தந் தவறுன் – மன முதலாய் வந்த விகாரத்தால் — வினையிரண்டுங் – காட்டி என்பதனுன் அறிக. ஈண்டுத் "தநு" என்றது சூக்கும தேகத்தை 'மனமுதலாய்' — மனங்காரணமாயென்க. "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" எனவும், "விண்ணு மண்ணக முழுதும் யாவையும் – வைச்சு வாங்குவாய்" எனவும் ஓதிய திருவாக்கானும் இவ்விரு வேறுவகையுங் கண்டு கொள்க.

இச் சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு:- மேலைச் சூத்திரத்தில் உத்தேசமாய் எடுத்துக் கொண்ட சங்கார காரணகிய முதல்வன். சங்காரம் ஐவகைப்படும் – அவற்றுள் முதலாவது, நிவிர்த்திக் கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; பிரம தேவரால் சங்கரிக்கப்படும், இரண்டாவது பிரதிட்டா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். விட்டினு மூர்த்தியால் சங்கரிக்கப்படும், மூன்றுவது; வித்தியா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம், குண உருத்திரனல் சங்கரிக்கப்படும்; நான்காவது, சாந்தி கலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம் மகேஸ்வரனல் சங்கரிக்கப்படும். இறுதியது சாந்தியாதீதகலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். அவற்றுள், ஈண்டைக் கேற்புடையது இறுதிக் கண்ணதாகலின், இச்சங்காரத்தைச் செய்யும் சதாசிவனை அதிட்டித்து நின்று சுத்தமாய தத்துவ புவனம் வரையும் ஒருங்கே சங்கரிக்கும், மகா சங்காரக் கடவுளாகிய பரமசிவனையே குறிக்கும் அன்றி அயன்மாலொடுங் கூடக் குண தத்துவத்தின் வைகிப் பிரகிருதி யுவனுந் தஞ் சங்கரிக்கும் குணருத்திரனையன் றென உணர்க.

அம்முதல்வன், கலப்பினல் உடலின உயிர்போல அவ்வான் மாக்களேயாய்ப், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல அவற்றின் வேறுமாய், உயிர்குயிராதற் றன்மையானே கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனுமாய் நின்று, ஆணையென்னும் ப்ரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பனென்றவாறு. (வளரும்)

## சில கருத்துகள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

போகும எறும்புக்கும நீதி வழங்குபவர். அப்படிப் பட்ட குரு நமது தவத்தாற் கிடைப்பவரன்றி நமது கருத்தைச் சொல்லுதற்கு வலிந்து நம்மாற் சிருட்டிக் கப்படுபவர் அல்லர்

6. தக்க குரு கிடைத்தால், [நமக்கு எது நன்மை நமது மனைவி மக்களுக்கு எது நன்மை என்று தெரியாத] குருடர்களாகிய நம்மிடம், நமக்கு வழிகாட்டுங்கள் என்று ஒருவ நம வரமாட்டார்கள்.

7. குருவில்லா வித்தை பாழ்.

(ஆ) சாத்திர விதியும் வழிபாட்டுமுறையும்:-

1 சாத்திர விதி ஞானகாண்டம், ஞானத்துக்கு நிமித்தமாகிய கரும காண்டம் என இருவகைப்படும.

கருமகாண்டம் முற்றுப் பெற்று ஞானம் கைவந்தவர்கள் சத்திநிபாதர்கள் எனப்படுவார்கள்; அவர்கள் சிவசம்பந்திகள். அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் தெய்வப் பிரதிநிதிகள்.

பெற்றான் சாமபான், முள்ளிச்செடி, நந்தனார், கணணப்பர், திருநீலகண்டத்துக் குயவர், தில்லைவாழந்தணர் எல்லாம சிவசமபந்திகள்; அவர்கள் எல்லாம் ஒரு குலம்; அவர்கள் கண்ட கடவுள் ஒரே கடவுள்.

'ஒன்றேகுலமும் ஒருவனேதேவனும்' திருமந்திரம்.

2 கரும காண்டததிலேதான் கட்டுப்பாடுகள்; வேற்றுமைகள்.

நாமெல்லாம் குறைபாடு உடையோம்; குறைபாட்டினலேதான் பிறப்பு வந்தது.

நமது குறைபாட்டை நாம் ஒழித்தற்குக் கிடைத்த விதியே கருமகாண்ட விதி.

நமது குறை பாட்டை நாம் ஒளித்தற்கு அஃதாவது மறைத்தற்குச் செய்யும் சட்டவிதி அபத்தியம். அது நமக்கு இனியது போலத் தோன்றி நோயைப் பெருக்குவதாம்

3. வைத்தியசாலையில் நோய்க்குத் தக்கவாறு, நோயாளிகளை வேறுபடுத்தி வைக்கின்றார்கள். கல்விக் கூடங்களிலும் அறியாமை நோய்க்குத் தக்கவாறு வகுப்புகள் வேறு வேறு அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே கருமகாணட விதிகளும் தகுதிக்கேற்றவாறு வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவர் நன்மையையும் முன்னிட்டே அவை அவ்வாறு வகுக்கப்பட்டிருககின்றன.

4. நோய் நீங்கிய பின் எல்லாரும் ஓர் குலம்; அப்பொழுது ஞானகாண்ட விதி.

தமிழர் சிங்களரையும், சிங்களர் தமிழரையும் முனிகின்றார்கள். இம முனிவு குறைபாட்டின் விளைவாகிய நோய், இந்நோய் 'நாம் சகோதரர்; இலங்கை மாதாவின் புதலவர் என்கின்ற சொன் மாத்திரையால் நீங்காது. அது ஞானம் ஒன்றினலேதான் நீங்கும

* 5. கருமகாண்டக் கட்டுப்பாடுகள்.

'ஒருவன் தனக்குத்தானே பகைவன்' என்பதைக் காட்டுவன'. என்பது காஞ்சிகாமகோடி பீடாதிபதியின் கருணை மொழிகளுள் ஒன்று. ஒருவன் சமயியாயிருப்பதற்கு, அவனே தடையாயிருக்கின்றானன்றிப் பிறரல்லர் என்பது அக் கருணை மொழியின் கருத்தாம். இதுவே மகாத்மாஜீயின் கருத்துமாகும். ஒருவன் சத்தியாக்கிரகஞ் செய்தோ, சட்ட விதிகள் பண்ணுவித்தோ, பிறர் உதவி கொண்டோ இறைவன் சந்நிதியை அடைய முயல்வானுயின், அவன் சமயி அல்லன். சமயத் துரோகி எனகிறார் மகாத்மா. (* இது ஹரிஜன் பத்திரிகையில் வந்தது.)

(வளரும்)

### பிழை திருத்தம்

அதை இப்படி வாசிக்கவும்

15-11-68 இந்துசாதன இதழில் பிரசுரிக்கப்பட்ட M B 6097 இலக்க கோட்டுவிற்பனவு விளம்பரத்தின் தீர்வைத் தொகையில் 7-10-68 தொடக்கம் 5-3-64 வரைக்கும் ரூபா 3000/-க்கு என்றிருப்பதை 7-10-63 தொடக்கம் 5-3-64 வரைக்கும் ரூபா 7000/— எனத் திருத்தி வாசிக்கக் கோருகின்றோம். தவறுநேர்ந்தமைக்கு வருந்துகின்றோம.

## பரமேஸ்வரர் ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம்

—::—

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் அமைந்துள்ள பரமேஸ்வரர் ஆலய சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் கார்த்திகை மீ 21 உ (6-12-68) வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும். ஷ தினத்தில் பரிவார மூர்த்திகட்கும் கும்பாபிஷேகம் நடைபெறும். கார்த்திகை மீ 19 உ (4-12-68) முதல் கிரியைகள் நடைபெறும். 6-12-68 இரவு 8-00 மணி முதல் சகஸ்ர நாம அர்ச்சனை பிரசாதம் வழங்கல் என்பன சிறப்புற நடைபெறும். இந்நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேற ஷ கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் சூழலில் வதியும் சைவஅன்பர்களும் அயராது உழைத்து வருகின்றனர்.

(எமது நிருபர்)

## நாவலர்பெருமான் குருபூசை

எதிர்வரும் 11-12-68 புதன்கிழமை யாழ் சைவபரிபாலனசபையினரால் ஷ சபைநாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நாவலர்குருபூசை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெறும் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிவபூசை, மாகேசுரபூசை நாவலர்திருவுருவப்பட ஊர்வலம், திருமுறைப் பாராயணம் விரிவுரைக்கூட்டம் என்பனவும் சிறப்புற இடம்பெறும்.

**சங்காபிஷேகம்**

கார்த்திகை மீ 24 உ (9-12-68) திங்கட்கிழமை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் விஷேச சங்காபிஷேகம் நடைபெறும்.

# கோணேஸ்வரம்

— ஆசிரியன் மா. பீதாம்பரன் —
( திருகோணமலை )

(முன்வளர்ச்சி — 2)

இவற்றைவிட ஆசுமதுரகவி முருகையன் பல்லாண்டுகட்குமுன் இயற்றிய 'திருக்கோணமலைச் சிவராத்திரி ஊஞ்சல்' இவரின் தந்தையார் ஸ்ரீ ராமலிங்கபண்டிதன் இயற்றியதெனக் கருதப்படும் திருக்கோணைநாதர் மும்மணிமாலை (4 ஏட்டுப் பிரதிகள்) வீரக்கோன் முதலியார் இயற்றிய 'வெருகற்காதல்' என்பனவும் உண்டு (இவற்றுள் மும்மணிமாலையினைப் பிரதி செய்துள்ளேன்; முகவுரையுடனும் குறிப்புரையுடனும் விரைவில் வெளிவரும்)

கோணவரைப் புராணம் என்பது 'திரிகோணசலபுராணம்' என்னும் பெயருடன் (சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் சிறப்புப்பாயிரத்துடன்) வண்ணைமாநகரம் பாரத்துவாசி ஆ. சண்முகரத்தினையரால் 1909 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் சிறப்புப்பாயிரத்தில் ஸ்ரீமத் குமாரசுவாமிப்புலவர் அவர்கள்

"மன்னிய வீழ மண்டல மதற்குச்
சென்னிபோன் றுளிர்ந்து சிரபுர மமர்ந்த
ஞானபோ னகம்பெறு நான்மறைப் பிள்ளை
தானினி தருளிய தமிழ்ப்பதி கம்பெறீஇக்
கூற்றரு மிறைவண் தலமலைக் கோடியுடன்
வீற்றிருந் தருடரூஉம் விழுச்சிறப் பெய்திய
கோணமா மலையெனும் குலவிய தலம்புகழ்
மாணமர் தெய்வ மாக்கதை"

என்று நயம்பெறக் கூறியுள்ளார்கள்.

அச்சிடப் பெற்றுள்ள "திரிகோணசல" புராணத்தின் அவையடக்கத்தில் உள்ள பாட்டு (௧௨) பின்வருமாறு:

'மச்சபுரா ணக்கதையும் கயிலாய
புராணத்தின் வாய்மை தானும்
முச்சகம்போற் றும்மறிஞர் முன்னுரைத்த
மரபுகளின் முறையுந் தூக்கி
மெச்சியசீர்த் தென்கயிலைப் பெரியோர்கள்
கூறெனமுன் விதியி னாய்ந்(து)
இச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்
தமிழ்ப்பாவி லியம்ப லுற்றேன்"

அவையடக்கத்துள் வந்துள்ள, இப் புராணத்தின் பரியாய நாமங்கள்:

'கோணமாமலையின் காதை'(செய்யுள் 2), 'திரிகோணமலைப் புராணம்' (3), 'கோணமலைப் பெருமான் றனருள்சேர் காதை' (5), 'தென்கயிலாய மலைச்சரிதம்' (9), கோணப் பொருப்பீசன் புகழ்ச் சரிதை (8) என்பனவாம்.

இப் புராணத்தை இயற்றியவர் யார் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. இப்புராண ஏட்டுப் பிரதியொன்று 'அகிலேசபிள்ளையார்' நூல்நிலையத்தில் உண்டு. அஃது 1855 ஆம் ஆண்டு வரையில். ஸ்ரீ மா. முத்துக்குமாரு என்னும் அறிஞரால் எழுதப்பட்டது. பழைய ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது போலும்.

இப்புராண ஆசிரியர், இராமாயணம், இரகுவமிசம், பெரியபுராணம், பகவற்கீதை என்னும் இலக்கியங்களில் நன்கு பயின்றவர் என்று எண்ண இடமுண்டு.

செய்யுள்கள் இனிமைவாய்ந்த செம்பாகமான நடையிலமைந்துள்ளன. இதனை ஏட்டுடன் ஒப்புநோக்கி வெளியிடுதல் சிறந்த சைவத் தொண்டும், தமிழ்த் தொண்டுமாகும்.

# அந்தணர் பயின்ற அருமறைவேள்வி

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேட்ட புலவர் அதற்கு உவமை கூறத்தக்க வேறோர் மெல்லிசையையும் கேட்கிறார். அந்த இசை அந்தணர் வேத மோதும் இசை.

"போது பிணி விட்ட கமழ் நறும் பொய்கைத் தாதுண் தும்பி, போது முரன்றுங்கு ஓதல் அந்தணர் வேதம் பாட"

என்பது புலவர் வாக்கு. புலவர் இவ்வாறு கூறுவதனால், வேதம் அதிக ஓசையின்றியும் இனிமையான இசையுடனும் ஓதப்பட்டதென்பது தெளிவு.

புறநானூறு என்னும் இலக்கிய காலத்திலே தலைச்சங்கப் புலவருள் ஒருவராகிய முடிநாகனார் என்பவர், இமயத்தையும், பொதியமலையையும் சிறப்பித்துக்கூறுமிடத்து அந்தணரின் வேள்விச் சிறப்பை எடுத்துக் கூறுகிறார், இந்த மலைகளில் உள்ள பெண் மான்கள் தம் மான் கன்றுகளுடன் மலைச்சரிவுகளில் அந்தணர் வளர்க்கும் நித்தியாக்கினியின் ஒளியில் அச்சமின்றித் தூங்கு மெனப் புலவர் கூறுகிறார்.

"அடுக்கத்து சிறுதலை நவ்வி
பெருங்கண மாப்பிணை
அந்தியந்தணர் அருங்கடனிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்"

என்பது புறநானூறு.

சில நாடுகளிலே மிகுதியாக அந்தணர்கள் இருப்பார்கள் யாவரும் ஒரே குறிப்பிட்ட காலத்தில் அக்கினி வளர்த்தலால் புகை அளவின்றி வானத்தில் செல்லுகின்றது. குயில்களுக்கு மழைக்காலம் வெறுப்பு. புகை மிகுதியாக வருதலினாலே மழை முகிலோ என ஆண்குயில்கள் அச்சங்கொண்டு பெண் குயில்களோடு ஓடிச் செல்கின்றன. இவ்வாறு ஒரு காட்சியைப் பட்டினப் பாலையில் காண்கின்றோம். குயில்கள் மயங்குவதாகக் கூறுவதில் வியப்பு அதிகம் இல்லை. நான்குமுகங்களையுடைய பிரமதேவரே மயங்கினார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

பிரமதேவர் முன்னொரு காலத்திலே இறைவன் அக்கினிப் பிழம்பாகிய கோலத்தை நேரே கண்டவர். அண்டமுங்கடந்து ஏகிய அக்கோலத்தின் முடியை பிரமதேவர்காணமுடியாது போய் விட்டது. வேதங்களை இசையோடு பாடுகின்ற அந்தணர் வேள்வி செய்ய எழுந்த புகையோ அண்டமும் கடந்து அப்பாற் செல்கிறது. பிரமதேவர் சிந்தனை செய்தார் முன்னே அக்கினிப் பிழம்பாகி அண்ட மெல்லாம் கடந்த இறைவன் மீண்டும் புகை வண்ணமாக பேருருக் கொள்கின்றாரோ என்று ஐயுற்றார்.

"பாடு நான்மறை அந்தணர்
வேள்விகள் பயில
மூடு தண்புகை அண்டமும்
கடந்தன முன்னம்
தேடு கின்றதோர் பரஞ்சுடர்
மீட்டுமித் திறத்தால்
நீடு கின்றதோ வென்முநான்
முகத்தனு நினைய"

(கந்தபுராணம்-நகரப் படலம்—36.)

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு**
**தானஞ் செய்வாரிற் றலை.**

# தொண்டின் மகிமை

## பொதுசன சேவைச் சங்கம் அங்குரார்ப்பணம்

"மக்களுக்குச் செய்யும் சேவை மகேசுவரனுக்குச் சேரும் என்பதைநாம்உணரவேண்டும். இது சிவதொண்டாகும், எனவே இத் தொண்டைச் செய்யும் நோக்கோடு ஒரு குழுவாகச் சேர்ந்து சபைஅமைக்கும் பெரும்பணியை ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இச்சேவையை வாலிபர்களாகிய நீங்கள் அயராது ஆற்றுவீர்கள்என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு"

இவ்வாறு சென்ற 16-11-68 அன்று நாயன்மார்கட்டு பாலர் பராமரிப்புக் கழக மண்டபத்தில் 'பொதுசனசேவைச்சங்கம்' என்னும் நாமத்துடன்கூடிய சங்கத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேசுவரியம்பாள் ஆலய பரிபாலனசபைத் தனாதிகாரியும், கோப்பாய்க் கிராமச் சங்கத்துக்கு கடந்த பல ஆண்டுகளாகப் போட்டியின்றித்தெரிவு செய்யப்பெற்று வருபவருமாகிய திரு. இ. சரவணமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. கா. இரகுநாதன் அவர்கள் சங்கத்தின் நோக்கங்களைச் சபையோருக்கு எடுத்துவிளக்கி இலட்சியங்களைச் செயற்படுத்த அனைவரும் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன், இக்கிராமத்தின் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து வசதிகள்முதலியவற்றிலுள்ள குறைபாடுகளை நீக்கும் பணியில் சங்கம் அயராதுழைக்கவேண்டுமெனவும் வற்புறுத்தினர்.

புது நிர்வாகிகள் தேர்தலின்போது திரு. வே. பூவிலிங்கம் அவர்கள் தலைவராகவும், திரு. சோ. தயாபரமூர்த்தி அவர்கள் செயலாளராகவும் திரு. கு. துரைராசா அவர்கள் பொருளாளராகவும் தெரிவு பெற்றதுடன் நிர்வாகசபையும் அமைக்கப்பெற்றது. (ந. கி.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சைவப்பாடசாலையடி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
கந்தையா இராசரத்தினம்
வழக்காளி
வழக்கு இல. M. B. 7524
எதிராக
புன்னாலைக்கட்டுவன்
சின்னையா பொன்னையா
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7524 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1968-ம் வருடம் மார்கழி மாதம் 31-ந் திகதி (31-12-68) செவ்வாய்க்கிழமை காலை 10-30மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 770-ம் 30-6-65 தொடக்கம் 31-7-67 வரைக்கும் ரூபா 500-க்கு 8 வீத வட்டியும், அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 321-26 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோயிற்பற்று, சவினை இறை, "உயிலடி" ஏக்கர் 4 பேர்ச் 2. எல்லை கிழக்கும்வடக்கும் K. சின்னப்பாவுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம், மேற்கு அப்பாப்பிள்ளை சரவணையின் ஆதனம். தெற்கு வயித்திலிங்கம் பெண் தையல் முத்துவுக்கும் மற்றையோருக்கு முரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாக ¹/3 பங்கு.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
Commissioner of Sales, Valuer
& Licensed Auctioneer
மல்லாகம், 24-11-68
எம், 292, 29-11-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

இல. M. B 8008

திருவிளங்கம் கைம் பெண் கனகம்மா உரும்பராய் —வழக்காளி
எதிராக
ரத்தினம் தியாகராஜா, கொண்டாவில் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M B 8008-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1969-ம் ஆ. தை மாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதலும்வட்டியுமாகரூபா 9, 991/65சதம் இன்னும் 6,000/- ரூபாவிற்கு 17.2.66 தொடக்கம் 29.11.66 வரைக்கும் நூற்றிற்கு 10 வீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 29.11.65 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் செலவு ரூபா 305/41 சதமும் இதில் செலவால் கொடுத்த ரூபா 150-ம் முதலில் கொடுத்த 1200- ரூபாவும் போக மிகுதி.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டமும், பகுதியும், நல்லூர் கோயிற்பற்று, கொண்டாவிலிறை "கொல்லைகாடு" பர. கில லா 3½, கல்வீடும், பயிர்களும், வடமேற்கு மூலையிலிருக்கும் கிணற்றுப் பங்கும், வழி, வாய்க்கால் பாவிப்புரிதகும். இந்த 3½ பரப்பிற்கு எல்லை கிழக்கு தற்பொழுது ஒழுங்கை, வடக்கும், மேற்கும் சின்னத்தம்பி கந்தையா விளுதனம் தெற்கு வையிரமுத்து நாகலிங்கத்திற்கும், ஜெகநாதர் திருநாமத்திற்கு முரியவாதனங்கள். இவ்வெல்லைக் குட்பட்டவை முழுவதும்.

"அகிலகம்"
28/1. யாழ்வீதி. யாழ்ப்பாணம்.
30—10—68.

நா. க. பொன்னுத்துரை J. P.
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
M 267 8-11-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 8383

1. A. V. சிவசிதம்பரப்பிள்ளையும் பெண்
2. தெய்வானைப் பிள்ளையும் 1-ம் குறுக்குத் தெரு பருத்தித்துறை —வழக்காளி

எதிராக

1. பாலன் இராசனும் பெண் 2 லெட்சுமிப்பிள்ளையும்
— அந்தோனியார் கோவிலடி காங்கேசன்துறை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8383-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1969-ம் ஆ ஜனவரி மீ 8-ம் உ புதன் கிழமை முற் பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை— முதல் வட்டி ரூபாய் 2037-50ம் 12-8-66 தொடக்கம் 6-4-67 வரைக்கும் ரூபாய் 1500-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 324-10

### ஆதன விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் வலிகாமம் வடக்கு மயிலிட்டி கோவிற்பற்று மயிலிட்டி இறை "காப்புவான்" வி பர, 2ம். 3½ குளியும். இதில் மேற்குப் பக்கமாய் அரைப் பங்கு வி. பர 1 ம் 1¾ குளியும் வடக்கு எல்லையிலுள்ள கிணற்றில் சகல உரிமைகளுடனும் நாலில் ஒரு பங்கும் இதன் எல்லை கிழக்கு எதிராளிகளுக்குச் சொந்தமான மிகுதி அரைப்பங்கு, வடக்கு ஒழுங்கை மேற்கு நன்னியன் கைம் பெண் பொன்னிக்குரிய ஆதனம தெற்கு முதலி பெண் மூத்தவளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் – இவையடங்கலும்,

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை
22-11-68

J. A. எட்வேட்,
கொமிஷனர் விற்பனையாளர்,
எம் 290, 29-11-68.


யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாபநிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா வீதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா வீதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவீத வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களை வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 வீதமும் 8 வீதமும் 9 வீதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலயமூலம் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்


ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகப்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 29—11—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

உரும்பிராய், வெற்றிவேலு சுவாமிநாதன் கைம் பெண்
தங்கரத்தினம் —வழக்காளி
இல. M. B. 7318 எதிராக
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கு ராவ்ஸ் றோட்டு
(Taff's Road)

1. சுந்தரன் முகதீன் கபீப் முகம்மதுவும் பெண்
2. சவ்வியா உம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7318-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 -ம் ஆ மார்கழி மீ 22 உ ஞாயிற்றுக்கிழமை 22-12-68 முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: — முதல் வட்டி ரூபா 11, 152/50ம் 26/3/65 தொடக்கம் 21/12/65 வரைக்கும் ரூபா 10, 000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 442/79ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தெல் மேற்கிறை "புளியடி" பர. நில இரா. ஒன்று குளிஒன்பதுடன் எட்டிலொன்று (பர. நில. 1, குளி 9 1/8) இது உத்தரவு பெற்ற கலாந்தர எஸ். ரி. பிள்ளையால் விஸ்தரிக்கப்பட்ட கலாந்தரப் படத்தில் 1 'B' துண்டாக விஸ்தரிக்கப்பட்டு தாயுறுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது வீடும், கூரைகளும், மற்று மதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு மஸ்தவுத்தின மாதர்சாதிப்பின் ஆதனம். வடக்கு முகம்மது முகைதின் இஸ்மெயிலுக்கும் பெண் ஆயிசா உம்மாவுக்குமுரிய ஆதனம் மேற்கு றோட்டு தெற்கு முகமது முசு பெண் மீரா முகைதீன் நாச்சியா விளுதனம். வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றுப் பாவிப்புரித்து உட்பட இடங்களும். பதிவு D 197/77

18, 5-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

அ. வெற்றிவேலு
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம், 288, 29-11-68,